**செய்தி வெளியீடு எண். 904** **நாள்.23.10.2008**

**நகர் ஊரமைப்புத் துறையில் புதிய அளவையாளர்/உதவி வரைவாளர் மற்றும் களப்பணி உதவியாளர்களுக்கு நிமயன ஆணைகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் இன்று (23.10.2008) அவர்கள் வழுங்கினார்கள்.**

நகர் ஊரமைப்புத் துறையில் நீண்ட காலமாக காலியாக இருந்துவரும் 32 அளவையாளர்கள் /உதவி வரைவாளர் மற்றும் 20 களப்பணி உதவியாளர் பதவிகளுக்குரிய நபர்களை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்டு, இன்று (23.10.2008) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி அவர்கள் நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

அளவையாளர்/உதவி வரைவாளர்களில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 6 நபர்கள்,மிகவும் பிறப்டுத்தப்பட்டோர் 5 நபர்கள், பிற்படுத்தப்பட்டோர் 20 நபர்கள், அதில் பெண்களில் 2 நபர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், 2 நபர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள்,10 நபர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என்றும் களப்பணி உதவியாளர்களில் 10 நபர்கள் தாழ்த்தப்பட்ட வகுப்பினர்கள், 5 நபர்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், 5 நபர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், அதில் பெண்களில், நபர்கள் தாழ்த்தப்பட்டவர்கள், 1 நபர் மிகவும் பிறபடுத்தப்பட்டவர், 1 நபர் பிற்படுத்தப்பட்டவர் என நியமிக்கப்பட்டுள்ளனர்.

நகர் ஊரமைப்புத் துறையில் சென்னைப் பெருநகர்ப் பகுதி நீங்கலாக தமிழகத்தின் ஏனைய பகுதிகளில் 2ஆம் நிலை நகர்ப்பகுதிகள் மற்றும் இதர நகராட்சிப் பகுதிகளின் அபிவிருத்திக்கான முழுமைத் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரித்து அவற்றில் கண்டுள்ள சாலைகள் மற்றும் இதர அபிவிருத்தித் திட்டங்களை செயல்படுத்த நிதியுதவி வழங்குதல், மனைப்பிரிவு ஒப்புதல், பலமாடிக் கட்டுமானங்கள், தகவல் தொழில்நுட்ப அலுவலகம், தொழிற்சாலை கட்டுமானங்களுக்குரிய ஒப்புதல் வழங்குவது, புராதன நகர்ப்பகுதிகளின் அபிவிருத்திக்கான நிதியுதவி, மானியம் ரூ.50 இலட்சம் வரை வழங்குவது, நகர்ப்பகுதிகளில் பூங்கா அபிவிருத்திக்காக ரூ.25 இலட்சம் வரை வழங்குதல் போன்ற பணிகள் விரைவாக நடைபெற்றிட புதிதாக பணி நியமனயம் செய்யப்பட்டவர்கள் மூலமும், மேலும் காலியாக உள்ள வேறு பணியிடங்கள் விரைவாக நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டதன் மூலமும் இப்பணிகள் நிறைவேற்றப்படும்.

மேற்படி கூட்டத்தில் தமிழக அரசு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் திரு.அரங்க செல்லமுத்து, இ.ஆ.ப., மற்றும் நகர் ஊரமைப்புத் துறை ஆணையர் திரு.அஷோக் டோங்கரே, இ,ஆ,ப, ஆகியோர் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் புதிய பணியாளர்களிடம் உரையாற்றும்போது, கடந்த ஆட்சியில் பணி நியமன தடை உத்தரவுச் சட்டம் இருந்தது, மாண்புமிகு தமிழக முதலமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றபிறகு, அந்த உத்தரவை நீக்கி பல இலட்சம் போர்களுக்கு வேலைகளை வழங்கியுள்ளார். இப்பணிபுரிய வந்துள்ள தாங்கள் இத்துறையில் உள்ள மூத்த அலுவலர்களின் வழிகாட்டுதலின்படி சிறப்பாக பணிபுரிந்து பொதுமக்களுக்கு உதவி செய்திடவும், இவ்வரசுக்கும் நற்பெயர் ஏற்படுத்தி தந்திடவும் கேட்டுக் கொள்கிறேன். பாண்டிச்சேரி மாநிலத்தில் உள்ள ஊரமைப்புப் போன்று திட்டங்களை உருவாக்கிட நீங்கள் உழைத்திட வேண்டும். உங்களுடைய புதிய, நவீன கருத்துக்களை தயக்கமின்றி எனக்கோ, அல்லது உயரதிகாரிகளுக்கோ தெரிவிக்க வேண்டும். உகந்த கருத்துக்கள் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்கள்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.